செ.வெ.எண்:140 நாள்:03.03.2018

திருநெல்வேலி மாவட்டத்தில் 302 கிராம ஊராட்சி நூலகங்களுக்கு ரூ.30.16 லட்சம் மதிப்பிலான 44,394 புத்தகங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

திருநெல்வேலி பாளையங்கோட்டை தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையத்தில் கிராம ஊராட்சி நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (03.03.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 302 கிராம ஊராட்சி நூலகங்களுக்கு ரூ.30.16 லட்சம் மதிப்பிலான 44,394 புத்தகங்களை வழங்கினார்.

திருநெல்வேலியில் புத்தகத்திருவிழா இந்த ஆண்டு சிறப்பாக நடத்தப்பட்டது. புத்தகத்திருவிழாவில் பங்கேற்ற 22 பதிப்பகங்கள் மூலம் 147 தலைப்புகளிலான புத்தகங்கள் மொத்தம் 44,394 எண்ணிக்கையில் கிராம ஊராட்சி நூலகங்களுக்காக வாங்கப்பட்டது. இந்நூல்களில் மொத்தம் மதிப்பு ரூ.46,55,934 ஆகும். இதில் தள்ளுபடி தொகை ரூ.16,40,177 கழித்தது போக நிகரத்தொகை ரூ.30,15,756 மதிப்பிலான புத்தகங்கள் வாங்கப்பட்டு இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 302 கிராம ஊராட்சி நூலகங்களுக்கு வழங்கப்பட்டது. நூல்கள் மாணவர்களுக்கு பயன்பெறும் வகையிலும், உலக சிந்தனைகளை அறிந்துகொள்ளும் வகையிலும் தரமான நூல்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.கல்யாணசுந்தரம், தமிழ்வளர்ச்சி பண்பாட்டு மைய துணைத்தலைவர் திரு.ரமேஷ்ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாலசுப்பிரமணியம், திருமதி.சண்முகதாய், தமிழ்வளர்ச்சி பண்பாட்டு மைய பொருளாளர் பேராசிரியர் ராமச்சந்திரன், மாவட்ட மைய நூலகர் திரு.முத்துகிருஷ்ணன், பொதிகை தமிழ்ச்சங்க தலைவர் கவிஞர் பேரா, நேரு யுவகேந்திரா ஒருங்கிணைப்பாளர் (ஓய்வு) திரு.மதிவாணன் மற்றும் அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.